சேவை நிறுவனம்

5-ஏ, பிரட்ஸ் ரோடு, சேலம்-7

-----

## 10-ஆம் ஆண்டு அறிக்கை (1998-99)

எமது நிறுவனத்தின் பத்தாவது ஆண்டின் நிறைவு விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் கடந்த ஓராண்டில் எமது சேவைகளில் சிலவற்றை எடுத்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எமது நிறுவனத்தின் சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களுக்கான சேவையில் கடந்த ஆண்டு ஒரு சிறப்பான ஆண்டாக அமைந்திருக்கிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளை விட கடந்த ஆண்டு எமது நிறுவனம் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் இந்த பத்தாவது ஆண்டு ஆண்டறிக்கையை நன்றியுடன் சமர்ப்பிக்கிறோம்.

### சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களைக் கண்டறிந்து உதவுவதில் எமது பணி:

சாலையோரங்களில் பல்வேறு பிரச்சினைகளால் சிக்கித் தவிக்கும் சிறார்களைச் சந்திக்கின்றோம். அவர்களில் பெரும்பாலும் வீட்டைவிட்டு ஓடி வந்தவர்கள், பெற்றோர்களின் வற்புறுத்தலாலும் குடும்ப வறுமையினாலும் கட்டாயமாக வேலைக்கு அனுப்பப் பட்டவர்கள், பெற்றோரை இழந்த சிறார்கள், உடல் ஊனமுற்ற சிறார்கள் போன்ற பிரச்சினைகளையுடைய எண்ணற்ற சிறார்களைச் சந்திக்கின்றோம்.

கடந்த ஓராண்டில் மட்டும் 212 ஆதரவற்ற, சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களைத் தொடர்பு கொண்டுள்ளோம். இவர்களில் 78 சிறுவர்கள் தகுந்த ஆலோசனைக்குப் பிறகு வீட்டுக்குத் திரும்பச் சென்றுள்ளனர். எமது மையத்தில் அனுமதிக்கப்பட்ட 134 சிறுவர்களில் 74 சிறுவர்கள் சிறிது காலம் மையத்தில் தங்க வைக்கப்பட்டு பெற்றோர்களோடு சேர்க்கப்பட்டுள்ளனர், கடந்த ஆண்டில் எமது மையத்தில் சராசரியாக 60 சிறுவர்கள் உறைவிடத்துடன் கூடிய சிறப்புப் பள்ளியில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை அவரவர் கல்வித் தகுதிக்கேற்றாற் போல் பயிற்றுவிக்கப்பட்டு வந்துள்ளனர்.

### கல்விப் பணிகள்:

கடந்த கல்வியாண்டுத் தொடக்கத்தில் எமது மையத்திலிருந்த 30 சிறுவர்களை ரெகுலர் பள்ளிகளில் சேர்த்துள்ளோம். விடுதி வசதிகளுடன் கூடிய பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். ராசிபுரம், காக்காவேரி, அரக்கோணம் அருகாமையில் உள்ள சகாயத்தோட்டம், சென்னை திருவொற்றியூர் போன்ற இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். எமது மையத்திலேயே தங்கி 15 சிறுவர்கள் 4-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை அருகாமையிலுள்ள சகாதேவபுரம் அருணாச்சலம் உயர்நிலைப் பள்ளியிலும், சி.எஸ்.ஐ. மேல் நிலைப் பள்ளியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் அந்தந்த பள்ளிகளில் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்று ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. மேலும் மாநகரில் குடிசைப் பகுதிகளிலுள்ள எமது இடைக்கால்ப் பள்ளி மற்றும் மாலை நேர வகுப்புகளிலிருந்த 90 சிறார் சிறுமியர்களை கடந்த ஆண்டு பல்வேறு பள்ளிகளில் சேர்த்து பள்ளிப் படிப்பை மேற்கொள்ளச் செய்திருக்கிறோம். இவர்களில் பெரும்பாலான சிறார் சிறுமியர்கள் பள்ளியை

விட்டு இடையில் நின்றவர்கள் மற்றும் வேலைக்குச் சென்று கொண்டருந்தவர்கள்.

## இடைக்காலப் பள்ளிகள்:

எமது சேவையில் இரண்டாம் கட்டப் பணி குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பாகும். குடும்பத்தின் வறுமையினாலும் பெற்றோர்களின் அறியாமை மற்றும் அலட்சியப் போக்கினாலும் வேலைக்கு செல்லும் குழந்தைகள் சேலம் மாநகரத்தில் ஏராளம். சேலம் மாநகரில் ஆட்டோ மொபைல் ஒர்க் ஷாப், வெள்ளிப் பட்டறை, தறி பட்டறைகள், உணவு விடுதிகள் மற்றும் டீ கடைகளில் ஏராளமான சிறுவர்கள் வேலை செய்கின்றனர். குடிசைப் பகுதிகளில் பெரும்பாலான சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் வீட்டு வேலை செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்கள் மற்றும் பள்ளிக்கே செல்லாதவர்கள். மாநகரில் பத்து இடங்களைத் தெரிவு செய்து இத்தகைய பள்ளிக்குச் செல்லாத 5 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு தகுந்த பயிற்சியளித்து பள்ளியில் சேர்க்கும் நோக்கத்துடன் 'க்ரை' என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பேராதரவோடு கடந்த நவம்பர் 13-ஆம் தேதி மாநகரத் தந்தை டாக்டர் கோ.சூடாமணி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு மையத்திலும் குறைந்தது 25 சிறார் சிறுமியர் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு மையத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 10 மையங்களில் மொத்தம் 260 சிறார் சிறுமியர் பயிற்சியளிக்கப் பட்டு வருகின்றனர். வரும் கல்வியாண்டில் இடைக் காலப் பள்ளிகளிலிருந்து 150 சிறார் சிறுமியர்களைப் ரெகுலர் பள்ளிகளில் சேர்க்க திட்டமிட்டுள்ளோம். இடைக்காலப் பள்ளி மையங்கள் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணிவரை செயல் பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிறைவேற்றப்பட்டு பெரும் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பள்ளிக்குச் செல்லும் ஏழை எளிய சிறார் சிறுமியருக்கான மாலை நேர வகுப்புகள்:

குடிசைப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்தி விட்டு வேலைக்குச் செல்வதையும், வீதிகளில் திரிவதையும் தடுக்கும் நோக்குடன் அவர்களுக்குப் பள்ளி நேரம் முடிந்ததும் மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை சிறப்பு வகுப்புகள் நகரில் 6 மையங்களில் நடத்தப் பட்டு வருகின்றன. அவர்கள் பள்ளியில் நடத்தப்படும் பாடங்களை நல்ல முறையில் கற்று தேர்வுகளில் வெற்றி பெற சிறப்பு கவனம் செலுத்தப் படுகிறது. மாநகரில் கிச்சிப் பாளையம், நாராயண நகர், நேரு நகர், பழைய பேருந்து நிலையம் அருகில், சன்னியாசிகுண்டு, பிரட்ஸ் ரோட்டிலுள்ள மக்கான் தெரு ஆகிய இடங்களில் மாலை நேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

## பெற்றோர் ஆசிரியக் கூட்டங்கள்:

இடைக்காலப் பள்ளிகள் மற்றும் மாலை நேர வகுப்புகள் சிறப்பாகச் செயல்படவும் ஏழை எளிய சிறார் சிறுமியர் முழுமையாகப் பயனடையவும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். ஆகவே, ஒவ்வொரு மையத்திலும் அவ்வப்போது பெற்றோர் ஆசிரியக் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன. கடந்த ஆண்டில் ஒவ்வொரு மையத்திலும் இரண்டு முறை நடைபெற்றன. இந்தக் கூட்டங்களில் குழந்தைகள் கட்டாயமாக பள்ளிக்கு அனுப்பப் பட வேண்டும் வேலைக்கு அனுப்பப் படுவதை தடை செய்ய வேண்டும் என்ற அம்சங்கள் விவாதிக்கப்பட்டன. இந்த சிந்தனைகளையூட்டும் விழிப்புணர்ச்சியூட்டும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப் பட்டன.

புதிய பேருந்து நிலைய வளாகத்தில் சிறார் வழிகாட்டி மையம் :

எமது நிறுவனத்தின் சேவைப் பணிகளில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள சிறார் வழிகாட்டி மையம் ஒரு மைல் கல் என்றே சொல்லலாம். எமது நீண்ட நாள் கோரிக்கையை அன்புடன் ஏற்று மாநகருக்கே முக்கிய இடமாக விளங்கும் புதிய பேருந்து நிலையத்தில் சிறார் வழிகாட்டி மையம் ஒன்றை அமைக்க உதவிய மாநகரத் தந்தை டாக்டர் கோ.சூடாமணி அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றி. பல்வேறு காரணங்களால் பெற்றோரை விட்டு வீட்டை விட்டு சொந்த ஊரை விட்டு ஓடி வரும் சிறார்களை புதிய பேருந்து நிலையத்தில் தான் முதன் முதலாக காண முடியும். திக்கற்று, உள்ளம் நொருங்கி சோர்வுற்று வரும் மாசற்ற சிறார் சிறுமியரை அன்புடன் அரவணைத்து அவர்கள் தீய சக்திகளின் வலையில் சிக்காதபடி பாதுகாப்பதில் எமது சிறார் வழிகாட்டி மையம் பெரும் பங்கு வகிக்கிறது. இம் மையம் கடந்த டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி வணக்கத்துக்குரிய மாநகரத் தந்தை டாக்டர் கோ.சூடாமணி அவர்களால் சமூக பாதுகாப்பு இயக்குநர் திரு.புகாரி, இ.அ.ப., அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இன்று வரை இந்த மையத்தின் மூலம் 162 சிறார்களை கண்டறிந்துள்ளோம். காணாமல் போன சிறுவர்களைப் பற்றி ய தகவல்கள் 29 பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்டு 8 சிறுவர்கள் தங்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து சேலம் மாநகராட்சி யின் ஒத்துழைப்புடனும் பேராதரவுடனும் எமது நிறுவனம் சிங்க நடைபொட்டு சிகரத்தில் ஏறுவதோடல்லாமல் வானத்திலும் ஏறி விட முடியும் என்பதில் ஐயமில்லை.

எமது மையத்திலுள்ள சிறுவர்களுக்கான சிற்றுலா மற்றும் ஊக்குவிப்பு முகாம் :

கடந்த ஆண்டில் எமது மையத்தில் தங்கியுள்ள சிறுவர்களுக்காக மூன்று ஒரு நாள் சிற்றுலாக்கள் நடத்தப்பட்டன. சேலம் அருகாமையிலுள்ள ஏற்காடு, பாற் பண்ணை, பி.பள்ளிப்பட்டி, கந்தாஸ்ரமம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் எமது மையத்திலுள்ள சிறுவர்களுக்கு ஏலகிரி மலையில் ஒரு வார ஊக்குவிப்பு முகாம் நடத்தப்பட்டது. ஊக்குவிப்பு முகாமின் போது சிந்தனையைத் தூண்டும் அறிவுரைகளும், குழுப் பயிற்சிகளும், விளையாட்டுக் களும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

புதிய சி.எல்.இ. கல்வி போதனா முறை அறிமுகம் :

சேலம் ரோட்டரி சங்கத்தின் ஆதரவோடு சர்வதேச ரோட்டரி சங்கத்தின் உதவியோடு வளரும் நாடுகளுக்கான எழுத்தறிவுத் திட்டம் எமது மையங்களில் அறிமுகப் படுத்துவதற்கு எமது ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப் புதிய போதனா முறையினால் எழுத்ததறிவற்ற சிறார் சிறுமியர் ஆர்வத்தோடு கற்றுக் கொள்கின்றனர். இந்த புதிய போதனா முறை எமது இடைக்காலப் பள்ளி மையங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. இப்புதிய முறையில் பல்வேறு குழு விளையாட்டுக்களுடன் பாடம் கற்பிக்கப் படுவதால் சிறார் சிறுமியர் ஆர்வத்துடன் கற்றுக் கொள்ளுகின்றனர். இந்த புதிய போதனா முறையை அறிமுகப் படுத்த உதவியாயிருந்த சேலம் ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கும் முக்கியமாக முன்னால் ரோட்டரி மாவட்ட கவர்னர் திரு.பி.வி.புருஷோத்தமன் அவர்களுக்கும், இன்னால் சேலம் ரோட்டரி சங்கத் தலைவர் திரு.வேலாயுத ரவீந்திரன் அவர்களுக்கும், முன்னால் தலைவர் திரு.எ.பெருமாள் அவர்களும் எமது நெஞ்சார்ந்த நன்றி.

ஏமது சேவைக்கு ரோட்டரி சங்கத்தின் பிற உதவிகள்:

சேலம் ரோட்டரி சங்கத்தின் பரிந்துரையின் பேரில் ரோட்டரி இண்டர் நேஷனல் அமைப்பு இவ்வாண்டு 6000 அமெரிக்க டாலம் உதவியை அளித்துள்ளது. இத்தொகையில் நான்கில் ஒரு பகுதியை பங்குத் தொகையாக எமது நிறுவனத்திலிருந்து செலுத்தியிருக்கிறோம். இந்த தொகையானது காலையோரச் சிறார்களுக்கு சி.எல்.இ. போதனா முறை அறிமுகப் படுத்தவும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும் உபயோகப்படுத்தப் படவுள்ளது. இந்த உதவியின் ஒரு பகுதியாக கடந்த பிப்ரவரி மாதம் பேண்டு வாத்தியங்களும் தமிழ இசைக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளது. மேலும் மேஜை நாற்காலிகளும் வழங்கப் பட்டுள்ளது. ஏற்காடு அடிவாரத்தில் கட்டி முடிக்கப் படாத நிலையிலுள்ள கட்டிடத்திற்கு தளம் அமைத்துத் தரும் பணியினையும் சேலம் ரோட்டரி சங்கம் ஏற்றுள்ளது.

தொழிற் கல்விப் பயிற்சி:

எமது மையத்திலுள்ள சிறார்களுக்கு கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொடுத்து அவர்கள் சுயமாக சம்பாதித்து பிற்காலத்தில் ஒரு நல்ல குடிமகனாக உருவாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தொழிற் பயிற்சியளிக்கப்பட உள்ளது. அதற்கான கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் தயாராக உள்ளன. நான்கு வகையான பிரிவுகளில் தொழிற்கல்வி பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. ஆட்டோ மொபைல் பழுது மற்றும் பராமரிப்பு, மின்சார வயரிங் மற்றும் பழுது நீக்கும் பயிற்சி, கட்டிடம் கட்ட கட்டுமானப் பயிற்சி, கைத்தறி மற்றும் விசைத் தறிப் பயிற்சி போன்றவைகள் அளிக்கப்படவுள்ளன. ஏற்கனவே, ஓர் ஆண்டு காலமாக எமது மையத்திலிருந்த 35 சிறுவர்கள் சென்னைக்குரம அருகாமையிலுள்ள எமது நிறுவனத்தை சார்ந்த பயிற்சிக் கூடத்தில் தொழிற்பயிற்சி யளிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்காடு மலையடிவாரத்தில் எமது மையத்தின் வளர்ச்சி:

ஏற்காடு மலையடிவாரத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் இரண்டரை ஏக்கர் நிலத்தை எமது சேவைப் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு.உறன்ஸ் ராஜ வர்மா உத்தரவு அளித்ததின் பேரில் கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த இடத்தைப் பக்குவப் படுத்தி பயன்பாட்டுக்கு கொண்டு வருவதில் பெரும் வெற்றி கிடைத்துள்ளது. கரடு முரடாகவும் முட் புதர்களாகவும் இருந்த அந்த இடத்தை செம்மைப் படுத்தி இப்போது ஒரு பூங்காவனமாக மாற்றியிருக்கிறோம். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக 50 சிறார்கள் அங்கு போதுமான வசதிகளோடு தூங்க வைக்கப்பட்டு சிறப்பு பள்ளி என்ற அமைப்பில் கற்பிக்கப்பட்டு வருகின்றனர். இந்த இடத்திற்கான அதிகாரப் பூர்வமான உரிமம் பெறும் முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம். எங்களது முயற்சியின் பயனாக கடந்த சில நாட்களுக்கு முன்பு மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், கோட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் பார்வையிட்டு அந்த இடத்திற்கான முழு உரிமத்தையும் அரசிடம் பெற்றுத் தர சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளது. எங்களது விடா முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளதென்றே சொல்லலாம்.

18 வயதுக்கு மேற்பட்ட சாலையோர இளைஞர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள்:

எமது சேவையில் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு சிறப்பு கவனம் செலுத்துவதில்லை என்ற போதிலும் கூட ஏற்கனவே எமது மையத்துடன் தொடர்பு கொண்டுள்ள 25 ஆதரவற்ற இளைஞர்களுக்கு அவர்கள் சுய வேலை வாய்ப்பு தேடிக் கொள்வதற்கும் வாழ்க்கையில் நல்லதொரு நிலையை அடைவதற்கும் பல்வேறு உதவிகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 6 இளைஞர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு பேருக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்கவும் மற்றும் பிறருக்கு வியாபாரம் செய்து வருவாய் ஈட்டவும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு இளைஞர்களுக்கு வங்கி உதவியுடன் சொந்த ஆட்டோ ரிக்ஷா வாங்கவும், உதவி செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் உதவுடன் சுலபத் தவணை முறையில் அடுக்குமாடிக் குடியிருப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 25 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் கடந்த மூன்றாண்டுகளில் 23 இளைஞர்களுக்கு கார் மற்றும் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியோடு அதற்கான உரிமம் வழங்க உதவி செய்திருக்கிறோம். திருமண உதவிகளும் வழங்கப் பட்டுள்ளது.

எமது நிறுவனத்திற்கு மத்திய அரசின் உதவி:

எமது நிறுவனத்தின் சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களுக்கான பணிகளுக்கு மத்திய அரசின் உதவி கோரி மினிஸ்ட்ரி ஆப் சோசியல் ஜஸ்டிஸ் அன்ட் எம்பவர்மென்ட் துறைக்கு விண்ணப்பம் செய்துள்ளோம். எமது விண்ணப்பத்தை சென்னை சமூகப் பாதுகாப்பு இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார். விரைவில் மத்திய அரசின் நிதியுதவி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

குறிப்பிடத்தக்க பிற சேவைகள்:

பெற்றோர்களால் கைவிடப்பட்டு கடந்த 10 ஆண்டுகளாக சிறுவயதுமுதல் எம்மோடு தொடப்பு கொண்டு பயனடைந்து வந்த 21 வயது அடைந்த பாஷா என்ற இளைஞன் தற்போது தம்முடைய பெற்றோரை கண்டுபிடித்து அவர்களோடு இணைந்துள்ளான்.

சிறுவயதிலேயே பெற்றோர்களால் கைவிடப் பட்ட மற்ற இரண்டு பெண்கள் எமது உதவியால் செவிலியர் படிப்பை முடித்து விட்டு பணி செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் வெகு நாட்கள் பிரிந்திருந்த தம் தந்தையோடு சேர்ந்துள்ளனர்.

## கோடை முகாம்:

ஒவ்வொரு ஆண்டும் கல்வியாண்டின் இறுதியில் கோடை முகாம் கொண்டாடுவது எமது நிறுவனத்தின் வழக்கமான நிகழ்ச்சிகளில் ஒன்று, எமது மையங்களில் தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து சிறார்க சிறுமியருக்கும் கோடை முகாம் நடத்தப் படுகின்றது. இந்த ஆண்டு கோடை முகாம் மே 1-ஆம் தேதி தொடங்கி 13-ஆம் தேதி வரை நடைபெற்றது. கோடை முகாம் நாட்களில் ஒவ்வொரு மையங்களிலும் விளையாட்டுப் போட்டிகளும், கலைப் போட்டிகளும் நடத்தப்பட்டன. கடைசி நாளன்று தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டன. கடைசி நாள் நிகழ்ச்சிகள் இந்த ஆண்டு சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான தொங்கும் பூங்காவில் நடைபெற்றது. கோடை முகாமில் 400 சிறுவர் சிறுமியர் கலந்து கொண்டனர். கோடை முகாம் நிறைவு நிகழ்ச்சி திரு தமிழ்நாடு கூடைப் பந்துச் சங்க புரவலர் திர.கே.ஜெயசீலன் அவர்கள் தலைமையில் நடந்தது. வெற்றி பெற்ற மாணவ மாணவிருக்கு லட்சுமி மெடிக்கல்ஸ் உரிமையாளர் திரு.எம்.எஸ்.பி.சுப்ரமணியன் அவர்கள் பரிசுகள் வழங்க உதவி செய்தார்கள். மாநகராட்சி தொங்கும் பூங்காவில் கோடை முகாம் நிறைவு நிகழ்ச்சி நடத்த அனுமதி அளித்த மாநகரத் தந்தை அவர்களுக்கு மிக்க நன்றி.

## குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முயற்சியில் சாலையோர மற்றும் குழந்தைத் தொழிலாளருக்கான மாநில அளவிலான மாநாடு:

சிறார் உரிமைக் கூட்டமைப்பு என்ற சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களுக்காகவே பணியாற்றும் 31 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சார்பில் உழைக்கும் சிறார்களுக்கான மாநாடு ஒன்றினை கடந்த ஏப்ரல் 29, 30 தேதிகளில் சேலம் மூவேந்தர் அரங்கத்தில் வெற்றிகரமாக எமது நிறுவனம் ஏற்று நடத்தியது. 150 க்கும் மேற்பட்ட சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்கள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து கலந்து கொண்டனர். மாநாட்டின் முக்கிய அம்சமாக குழந்தை தொழிலாளர்களின் கோரிக்கைகள் அவர்களாலேயே பட்டியலிடப்பட்டு சேலம் மாவட்ட ஆட்சியரிடமும் வணக்கத்துக்குரிய மாநகரத் தந்தை அவர்களிடமும் வழங்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

## ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள்:

எமது நிறுவனத்தில் பணியாற்றும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த அவ்வப்போது பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. சிறார் உரிமைக் கூட்டமைப்பு என்ற ஏ சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களுக்கென்றே பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து நடத்திய களப்பணியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களுக்கான பயிற்சியில் எமது ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பட்ட கருத்தரங்கு களிலும், பட்டறைகளிலும் எமது பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

எமது மையத்திற்கு வருகை தந்த சிறப்பு வருகையாளர்கள்:

- கடந்தஜூஜுலை மாதம் உறாலந்து நாட்டிலிருந்து வேர்ல்டு சர்வண்ட்ஸ் என்ற தன்னார்த் தொண்டு நண்பர்கள் 35 பேர் அடிவாரத்திலுள்ள எமது மையத்தில் இரண்டு வாரங்கள் தங்கி கட்டிடம் ஒன்றை எழுப்பிச் சென்றுள்ளனர். மீண்டும் அவர்கள் வரும் ஆகஸ்டு மாதத்தில் வருவார்களென எதிர்பார்க்கிறோம்.

- உறாலந்து நாட்டிலிருந்து வந்த ஜெரார்டு என்ற இளைஞர் தமது சொந்த பணத்திலிருந்த ரூ.80,000 செலவில் விளையாட்டுச் சாதனங்களை அமைத்துள்ளார்.

- சென்னையைச் சேர்ந்த 'க்ரை' என்ற குழந்தைகளின் நலத்துக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மேலாளர் திரு.சைமன் அவர்கள் எமது மையங்கள் அனைத்தையும் பார்வையிட்டு இடைக்காலப் பள்ளிகள் நடத்த உதவியிருக்கிறார்.

- தமிழ்நாடு அரசின் சமூகப் பாதுகாப்பு இயக்குநர் அவர்கள் கடந்த டிசம்பர் மாதத்தில் சேலம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் சிறார் வழிகாட்டி மைய்த் திறப்பு விழாவில் கலந்து கொண்டதோடு எமது நிறுவனத்திற்கு மத்திய அரசின் நிதியுதவிக்கும் பரிந்துரை செய்துள்ளார்
- கடந்த பெப்ருவரி மாதத்தில் ஜெர்மனியிலுள்ள ஆந்தேரி உறில்பே என்ற தொண்டு நிறுவனத்தின் மாநிலப் பிரதிநிதி அருட்திரு.குழந்தைராஜ் அவர்கள் எமது மையத்தின் பணிகளை 'பார்வையிட்டுச் சென்றார்.

- சலேசிய மாகாணப் பிரதிநிதி அருட்திரு.ஜேம்ஸ் தியோபிலுஸ் அடிகள் எமது நிறுவனத்தின் பணிகளைமார்ச் மாதத்தில் ஆய்வு செய்தார்

நன்றி:

கடந்த ஆண்டு எமது நிறுவனத்திற்கு பெரிதும் உதவிய நல்ல உள்ளங்களுக்கு நன்றி. குறிப்பாக சேலம் ரோட்டரி கிளப் நிர்வாகிகள், உறுப்பினர்கள், வணக்கத்துக்குரிய மாநகரத் தந்தை, சேலம் மறைமாவட்ட ஆயர், முதன்மைக் குரு, பள்ளி நிர்வாகத்தினர், அருட் சகோதரிகள், செய்தி தாள் நிருபர்களுக்கும் மிக்க நன்றி.